**சார்பு நீதிமன்றம், பரமத்தி**

முன்னிலை – திரு.ஜி.பிரபாகரன், பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, பரமத்தி.

2022–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 23–ம் தேதி வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்:80/2022 ( CNR.No.TNNM10003222022)**

| | | |
|---|---|---|
| நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வேலூர் கிராமம், அனிச்சம்பாளையம்புதூரில் வசிக்கும், ராசையன் (எ) மருதகண்டர் அவர்களின் குமாரர், இந்து, சுமார் 43–வயதுள்ள சீனிவாசன். | }<br>}<br>}<br>} | ... வாதி |

// எதிரிடை//

| | | |
|---|---|---|
| 1) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வேலூர் கிராமம், அனிச்சம்பாளையம்புதூரில் வசிக்கும், ராசையன் (எ) மருதகண்டர் அவர்களின் குமாரர், இந்து, சுமார் 45–வயதுள்ள ஐயப்பன் (எ) வீரன்.<br>2) நாமக்கல் மாவட்டம், பரமத்தி வேலூர் வட்டம், வேலூர் கிராமம், அனிச்சம்பாளையம்புதூரில் வசிக்கும், ஐயப்பன் (எ) வீரன் அவர்களின் குமாரர், இந்து, சுமார் 19–வயதுள்ள கமலேஷ்வரன். | }<br>}<br>}<br>}<br>}<br>}<br>}<br>}<br>} | ... பிரதிவாதிகள். |

வழக்கு தாக்கலான நாள்: 27.06.2022

வழக்கு கோப்பிற்கு எடுக்கப்பட்ட நாள்: 29.06.2022

முதல் பரிகாரத்திற்கு தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைக்கட்டணம் மற்றும் வழக்குகள் மதிப்பீட்டு சட்டம் பிரிவு 25 (d) –ன் படி ரூ. 150/–மும், இரண்டாவது பரிகாரத்திற்கு, சட்டம் பிரிவு 25 (b) –ன்படி ரூ.17035/–ம் மொத்த நீதிமன்ற முத்திரைக்கட்டணமாக ரூ.17185/–ம் செலுத்தப்பட்டிருக்கிறது.

<u>வழக்கு மூலம் :–</u>

வாதியின் தகப்பனார், வாதி பெயருக்கு தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ள 12.06.1998 தேதியிலும், மேற்படி தானசெட்டில்மெண்ட்டை ரத்து செய்து எழுதி வைத்துள்ள ரத்துபத்திரத்தின் சான்றிட்ட நகலை வாதி பெற்ற 18.03.2022 தேதியிலும், வழக்குரைச்சொத்தை வாதி அனுபவித்து வருவதை, பிரதிவாதிகள் தடை செய்ய முயற்சித்த 10.05.2022–தேதியிலும், பின்னிட்ட ஒவ்வொரு தேதியிலும் இந்நீதிமன்ற அதிகார வரம்பிற்குட்பட்ட நாமக்கல் மாவட்டம், வேலூர் கிராமத்தில் வைத்து உற்பத்தி.

வாதியால், இவ்வழக்கானது, வாதிக்கு, வழக்குரைச்சொத்தைப்பொறுத்து, கடந்த 12.06.1998–ம் தேதியில், ராசையன் (எ) மருதகண்டர் எழுதிக்கொடுத்துள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை அவர், கடந்த 29.12.2004–ம் தேதியில், ரத்து செய்து, எழுதிய, தான செட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் செல்லாது என்று ரத்து செய்தும், வழக்குரைச்சொத்து, வாதிக்கு பாத்தியப்பட்டது என்று, விளம்புகை பரிகாரம் கோரியும், அதன் காரண பரிகார்த்தமாக, வழக்குரைச்சொத்தில் உள்ள, வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகள் எவ்விதமான இடையூறும் செய்யக்கூடாது என்று, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும் மற்றும் செலவுத்தொகை கோரியும், பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வழக்கானது, என் முன்பாக இன்று 23.12.2022–ம் தேதியன்று, இறுதி விசாரணைக்காக வந்தபொழுது, வாதிக்காக கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பி.கே.பெரியசாமி அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகள் எக்ஸ்பார்ட்டி செய்யப்பட்டும், வாதி தரப்பில் நிகழ்த்திய வாதங்கள் கேட்கப்பட்டும், வாதி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து, இன்று இந்நீதிமன்றம் பிறப்புவிக்கும்,

**<u>தீ ர் ப் பா ணை :–</u>**

| | |
|---|---|
| 1) | வாதிக்கு, வழக்குரைச்சொத்தைப்பொறுத்து, கடந்த 12.06.1998–ம் தேதியில், ராசையன் (எ) மருதகண்டர் எழுதிக்கொடுத்துள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரத்தை அவர், கடந்த 29.12.2004–ம் தேதியில், ரத்து செய்து, எழுதிய, தான செட்டில்மெண்ட் ரத்துப்பத்திரம் செல்லாது என்று, அதை ரத்து செய்தும், வழக்குரைச்சொத்து, வாதிக்கு பாத்தியப்பட்டது என்று, விளம்புகை செய்தும், |

| | |
|---|---|
| 2) | அதன் காரண பரிகார்த்தமாக, வழக்குரைச்சொத்தில் உள்ள, வாதியின் அமைதியான சுவாதீன அனுபவத்திற்கு பிரதிவாதிகள் எவ்விதமான இடையூறும் செய்யக்கூடாது என்று, நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கியும், |
| 3) | இவ்வழக்கின் சூழ்நிலை மற்றும் தன்மை ஆகியவைகளை கருத்தில் கொண்டு செலவு தொகை ஏதுமில்லை என்றும் தீர்ப்பாணை பிறப்புவிக்கப்படுகிறது. |

(உபயதரப்பினர்கள் தரப்பில் செலவுத்தொகை பட்டியல் தாக்கல் இல்லை)

**சொ த் து வி ப ர ம்:-**

நாமக்கல் ரிடி, வேலூர் சப்ரிடி, பரமத்தி வேலூர் வட்டம், வேலூர் கிராமத்தில்,

1) க.ச.258/1 ந.ஏக்.1.01-க்கு தீர்.ரூ.21.08 உள்ளதில் மேல்புறம் தென்வடல் பொழியாக ஏக்.0.32-1/4-க்கு சக்குபந்தி:- குமாரபாளையம் வாய்க்காலுக்கும் தெற்கு, ஏ.வீரப்பக்கண்டர் நிலத்துக்கும் மேற்கு, சிவப்பிரகாசம் நிலத்துக்கும் கிழக்கு, கருசாமி பெராந்தகம் வீரப்பன் நிலத்துக்கும் வடக்கு இவைகளின் மத்தியில் உள்ள மேற்படி நிலம் ஏக்.0.32-1/4 செண்ட் நிலம் பூராவும். இதற்கு ஏ.மருதகண்டர், ஏ.வீரப்பக்கண்டர் வடிவுகவுரியிலிருந்து பாசனம் செய்து கொள்ள வேண்டியது. இதன் வடிவு தண்ணீரை பொது வடிவு கவுரில் வடிய வைத்துக்கொள்ள வேண்டியது. இதற்கு தடம் வடக்கு நந்தவனம் பாசனகவுர் வழியாய் வடக்கே சென்று பின்பு குருசாமி, முருகேசன், ஏ.வீரப்பக்கண்டர் நிலங்களின் பொழி வரப்பில் வடக்கே சென்று பின் பெராந்தகம் ஏ.வீரப்பக்கண்டர் கிழமேல் பொழி வரப்பு வழியாய் தடம் நடந்து கொள்ள வேண்டியது. தற்போதைய சப்-டிவிசன்படி க.ச.258/1ஏ, ந.ஆர்ஸ். 0.15.5-க்கு தீ.ரூ.7.57-ல் இந்த நிலம் உள்ளது.

2) மேற்படி கிராமம் க.ச.253/1 ந.ஏக்.3.21-ல் ஏக்.1.37-ம் க.ச.253/2 ந.ஏக்.0.84 1/2-ம் ஆக ஏக்.2.21- 1/2 நிலம் ஒரே காலையாய் இருப்பதில் மேல்புறம் தென்வடல் பொழியாக ந.ஏக்.1.09-க்கு சக்குபந்தி. குமாரபாளையம் வாய்க்காலுக்கும் தெற்கு, நஞ்சையிடையார் செல்லும் கிழமேல் ரோடுக்கும் வடக்கு, ஏ.வீரப்பக்கண்டர் பாக நிலத்துக்கும் கிழக்கு மேற்படி நிலம் ஏக்.2.21-1/2-ல் மீதியுள்ள 1.12-1/2-க்கும் மேற்கு இவைகளின் மத்தியில் உள்ள ந.ஏக்.1.09 நிலம் பூராவும். இதற்கு குமாரபாளையம் வாய்க்கால் தண்ணீர் நடநீர் பாசனமும், இதன் வடிவு தண்ணீரை குமாரபாளையம் வாய்க்கால் ஓரமாக மருதகண்டர் நிலத்துக்கும் ஏ.வீரப்பகண்டர் நிலத்திலும் சென்று மாரியப்பன்

குருசாமி நிலங்களின் வழியாய் ஓடை சுவரில் வடிய விட்டுக்கொள்ளும் பாத்தியமும், மாமூல் தடநடை பாத்தியமும் சேர்ந்தது. இதன் வடபுறம் கரையில் உள்ள இளம் தென்னை மரங்கள் 17, தென்புறம் கரையில் உள்ள இளம் தென்னை மரங்கள் 7 ஆக 24 தென்னை மரங்களும் சேர்ந்தது. இந்த நிலம் தற்போதைய சப்–டிவிசன்படி க.ச.253/1 பி ந.ஆர்ஸ் 0.53.0–ல் உள்ளது.

2022–ம் ஆண்டு, டிசம்பர் மாதம் 23–ம் நாள் என்னுடைய கையெழுத்தும், இந்நீதிமன்ற முத்திரையும் இடப்பட்டு வழங்கப்படுகிறது.

G PRABHAKARAN
Digitally signed by G PRABHAKARAN
Date: 2023.01.19 10:14:19 +0530

சார்புநீதிபதி,
பரமத்தி.

## PARTICULARS OF IMMOVABLE PROPERTY
## IN THE COURT OF THE SUBORDINATE JUDGE, PARAMATHY

## O.S.No. 80/2022

Srinivasan ... Plaintiff

//VS //

Ayyappan @ Veeran and another ... Defendants

**Valuation of immovable properties of the purpose of court fees**:

| Section and sub section of the Court fees Act | Nature of Suit | Annual Revenue or rent payable | Market Value | Value for purposes of Court fee. |
|---|---|---|---|---|
| Sec. 25 (d), | Declaration<br>Court fees paid<br>Rs.150/- | | 1,000.00 | 5,000.00 |
| Sec. 25 (b) | Declaration and<br>Permanent injunction<br>Court fees paid Rs.<br>17,195.00<br><br>Total C.F. Rs. 17,185/- | | 3,69,500.00 | 5,67,825.00 |

Sd/-M.சீனிவாசன்
Plaintiff

Sd/-P.K.Periyasamy
Counsel for the Plaintiff

//True copy//By order//
Sd/- P. Raju
Sheristadar